# அப்ரமேய ஸ்வாமி ஆலயம்

சாந்திப்பிரியா







பெங்களூரில் இருந்து மைசூர் செல்லும் பாதையில் 60 கி.மீடர் தொலைவில் உள்ளது மாலூர் என்ற இடத்தில் உள்ள கிருஷ்ணர் ஆலயம். அது மிகவும் பெருமை வாய்ந்த ஆலயம். அதற்கு மாலூர் என்ற பெயர் வந்ததே ஒரு கதை. முன்னொரு காலத்தில் சாரங்கதாரா என்ற மன்னனை ஒரு போரில் தோற்கடித்த அவன் எதிரிகள் அவனுடைய கை, கால்களை வெட்டி ஒரு ஆற்றில் அவனைத் தூக்கிப் போட்டுவிட்டுச் சென்று விட்டனர். ஆனாலும் வலியைத் தாங்கிக் கொண்டு பகவான் நாமத்தை ஜெபித்துக் கொண்டு கிடந்தவன் முன் தோன்றிய திவ்ய ஜோதியினால் மீண்டும் அவனுக்கு கை, கால்கள் முளைத்தது. அதனால் 'முளைத்தது' என்ற பெயரில் அமைந்த அந்த இடத்தின் பெயர் காலப் போக்கில் மறுவி மல்லூர் என ஆயிற்று.



இந்த இடம் பெருமைப் பெற்றதின் காரணம் பகவான் ராமபிரான் சிறிது காலம் இந்த இடத்தில் வசித்ததினாலதான். மேலும் அதனால் அதற்கு தென் பகுதி அயோத்தியா எனவும் இந்த இடத்தில் வசித்த மக்கள் அனைத்து வேதங்களையும் கற்று அறிந்திருந்ததினால் சதுர்வேத மங்கல

புரா எனவும் பெயர் பெற்றது. எவனொருவனுக்கு வேதங்களை அறிய ஆவல் உள்ளதோ அவர்களுக்கு அதை கற்றுக் கொள்ள வழி வகுக்கும் இடமான இது ஞான மந்திர ஷேத்திரம் என்ற ரெுடையும் பெற்றது. இராஜேந்திர சிம்ஹா என்ற சோழ மன்னன் மாலூரை தன்னுடைய பரந்த இராஜ்யத்தின் தலைநகராக அமைத்துக் கொண்டது அதன் பெருமையை மேலும் உயர்த்தியது.





கிருதே யுகத்தில் முன்னாள் மன்னனான விஜய பாலா என்பவனும், திரேதா யுகத்தில் கன்வ முனிவரும், துவாபர யுகத்தில் லம்பாஷிராவா என்ற முனிவரும், கலியுகத்தில் விக்னயேஷ்வரா என்ற முனிவரும் அப்பிரமேய ஸ்வாமியை இங்கு வந்து வணங்கியதான ஐதீகம் உள்ளது. ஸ்ரீமன் நாராயணரின் அம்சமான கபில முனிவர் அப்பிரமேய ஸ்வாமியின் கல்யாண குணங்களை பாமர மக்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் முக்தி பெறும் வழிக்கான உபதேசங்கள் புரிந்தார். இன்றைக்கும் அமர ஜீவ முனிவர்களான கபில முனிவரும், கன்வ முனிவரும் இந்த ஆலயத்தில் அப்பிரமேய ஸ்வாமியை ஏகாந்தமாக வணங்கி வருவதாகவும், இன்றும் இரவில் ஆலயத்தை பண்டிதர்கள் மூடித் தாளிட்டப் பின்னும், ஆலயத்தின் கருவறைக் கதவு திறக்கும் சப்தமும், ஆலய மணி மெல்ல ஒலிக்கும் சப்தமும் உள்ளிருந்து கேட்கின்றது என்றும் கூறுகின்றனர். ஸ்ரீமான் நாராயணரும், மகாலஷ்மியும் இங்கு குடியிருந்து மல்லூர்வாசிகளுக்கு தினம் தினம் தரிசனம் தருவது அவர்கள் செய்த அதிருஷ்டமே.

அப்ரமேயஸ்வாமி ஆலயம் மிகப் புராதான ஆலயம். அது 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் எனவும், இல்லை, அது 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் எனவும் சரித்திர ஆராய்ச்சியாளர்களினால் கூறப்படுகின்றது. ஆகவே அது உண்மையில் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆலயம் என்று தெரியவில்லை. ஆனால் ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. அந்த ஆலயம் இராமானுஜர் கர்நாடக மானில யாத்திரையை மேற்கொள்ளுவதற்கு முன்னரே கட்டப்பட்டு உள்ள ஆலயம். ஆனால் அப்ரமேயஸ்வாமிக்கு நந்த தீப கைங்கர்யம் நடைபெற்றதாக கூறப்படும் 980 ஆம் ஆண்டை சேர்ந்த கையினால் எழுதப்பட்டுள்ள பிரதி ஒன்று உள்ளதினால் அந்த ஆலயம் அதே ஆண்டை சேர்ந்ததாக இருக்கலாம் என நம்புகின்றனர்.

புராண வரலாறு ஒன்று இராமபிரான் தஷ்ஷிண அயோத்தியாவில் பல காலம் வந்து தங்கி இருந்து அப்ரமேயஸ்வாமியை வணங்கி வந்ததாகக் கூறுகின்றது. அப்பொழுது அவர் பல ஹோமங்களை அங்கு செய்ததாகவும், அதற்கேற்ப அவர் ஹோமங்கள் செய்ததாகக் கூறப்படும் பல இடங்களில் காணப்படும் இடிபாடுகள் அதில் கூறப்பட்டவைகளை உண்மை என உரைப்பதாகவும் கூறுகின்றனர். பிரும்மாநந்த புராணத்தின் மஹாத்மிய காண்டத்தில் பன்னிரண்டு பாகங்களில் அப்ரமேயஸ்வாமி குறித்துக் கூறப்பட்டு உள்ளன. மேலும் ஆலயத்தின் மகிமை என்ன எனில் அது நிலத்தின் மீது கட்டப்படாமல் கடல் மண் மீது கட்டப்பட்டுள்ளது என்பது வியப்பான செய்தி. பின்னர் அந்த ஆலயம் பல மன்னர்களினால் விஸ்தரிக்கப்பட்டு உள்ளது.

திராவிடக் கட்டிடக் கலையில் கட்டப்பட்டு உள்ள இராஜ கோபுரத்தில் தசாவதாரக் காட்சிகள் தத்ரூபமாக செதுக்கப்பட்டு உள்ளன. 30 அடி உயர மகா துவாரம் முன்னால் ஒரே பாறையில் செய்யப்பட்டுள்ள 30 அடி உயர தீபஸ்தம்பமும் உள்ளது. ஆலயத்திற்குள் நுழைந்ததும் அரவிந்தவல்லித் தாயார் சன்னதியில் தரிசனம் செய்யலாம். அங்குதான் ஆலயத்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள விஷ்ணு தீர்த்தத்தில் தாமரை மீது பிறந்ததாக கூறப்படும் மகாலஷ்மி ஒரு தாமரை மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ள சிலையாகக் காட்சி தருகின்றாள். அவளுடைய இரு கைகளும் தாமரை மலர்களை ஏந்தியவண்ணம் வரத மற்றும் அபய முத்திரையுடன் காட்சி தந்தவாறு பக்தர்களை இரட்சித்து அருளுகின்றாள். அதே சன்னதியில் தாயார் ஆண்டாளும், தேசிகரும் உள்ளனர். அதே ஆலயத்தின் வட மேற்குப் பகுதியில் நவநீத கிருஷ்ணரின் சன்னதியும் உள்ளது.

 

அதில் உள்ள விக்ரகத்தை வியாச முனிவர் ஸ்தாபித்ததாக ஒரு நம்பிக்கையும் உண்டு. அற்புதமான கலை அழகு சொட்டும் கருட பீடத்தில் காணப்படுவது தவழும் கிருஷ்ணரின் சிலை. பலவிதமான ஆபரணங்களை அணிந்துள்ள அந்த சிலையின் கழுத்தில் தொங்கும் புலி நகம் கொண்ட தாயத்து கண் திருஷ்டியைப் போக்க அணிவிக்கப்பட்டு உள்ளதாம். அந்த குழந்தை வடிவிலான நீலமேகசியாமளனின் அழகைக் கண்டு பூரித்துப் போன புரந்தரதாஸர் அதற்காக ஒரு பாடலையே பாடி உள்ளார். அந்த சன்னதிக்கு வந்து குழந்தை வரம் வேண்டும் என பிரார்தனை செய்யும் தம்பதியினர் அங்கு வைத்துவிட்டுப் போகும் தொட்டில் சன்னதியில் நிறையவே உள்ளது. மற்ற சன்னதிகளில் ராமானுஜர், கூரத்தாள்வார், வைகுண்ட நாராயணப் பெருமாள், ஸ்வயம்புவாக எழுந்துள்ள ஹனுமார் போன்றவர்கள் உள்ளனர். அந்த சன்னதிகளைத் தாண்டிப் போகும் பொழுது வருவது சாலிக்கிராமக் கல்லில் செதுக்கப்பட்டு உள்ள அப்ரமேயஸ்வாமி சன்னதி. அப்ரமேயா என்றால் அளவற்ற என்ற பொருள். அளவற்ற அருளைத் தருபவர் என்பதினால் அவருக்கு அந்தப் பெயர் ஏற்பட்டதாம். தூக்கி நிற்கும் தமது இரு கரங்களிலும் சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி நிற்க கீழே இறக்கி வைத்துள்ள இரு கைகளிலும் கதா மற்றும் அப்யஹஸ்தம் முத்திரையில் பத்மாவையும் வைத்துள்ளார். ஆலயத்தில் மூலவருடைய உற்சவ மூர்த்தியை சந்தனக் கட்டையில் செய்து வைத்துள்ளனர்.

ஆலய மகிமை குறித்து இரு கதைகள் கூறப்பட்டு வருகின்றது. ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி நதிக்கரையில் தாயம்மா என்ற பெண்மணி வசித்து வந்தாள். அவளுக்குக் கண் பார்வைக் கிடையாது. ஒரு நாள் அவளுடைய கனவில் கிருஷ்ணர் தோன்றி அவளை மாலூருக்கு வந்து தன்னை வணங்கினால் கண் பார்வை பெறுவாள் எனக் கூற பெரும் செல்வந்தரான அந்தப் பெண்மணியும் அதை நம்பி இந்த ஆலயத்திற்கு

வந்து பிரார்தனை செய்தபடி இருக்க சில நாட்களிலேயே அதிசயமாக அவள் கண் பார்வை பெற்றாள். அதன் பிறகு அவள் அங்கேயே தங்கி ஆலயத்திற்கு சேவை செய்து வந்தாளாம்.

அது போல சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்த ஆலயத்திற்கு வருகை தந்த மைசூர் மகராஜா அந்த சிலைகளின் அழகைக் கண்டு மயங்கி அவற்றை தன்னுடைய அரண்மனைக்குக் கொண்டு சென்று விட்டார். அவர் கனவில் தோன்றிய கிருஷ்ணர் அவர் செய்த அந்த தவறை கண்டித்து உடனடியாக அவற்றை ஆலயத்திற்குள் கொண்டு சென்று வைத்துவிடுமாறு அறிவுறுத்தியும் அதை ஏற்க மறுத்தார் மகராஜா. விளைவு, அவருடைய அரண்மனை திடீர் என தீப்பற்றிக் கொள்ள அதில் ஒரு பகுதி அழிந்தது. பயந்து போய் அவர் அந்த சிலைகளை ஆலயத்திற்குள் கொண்டு சென்று வைத்துவிட்டாராம்.

ஆலய விலாசம்:

*APRAMEYA AND NAVANEETHA KRISHNA TEMPLE,*

*Dodda Mallur, Channapatna Taluk, Bangalore District, Pin :571501*

*Telephone: : + 91 80 7251156 ( G.RADHAKRISHNA BHATTAR ) , 91 80 7251156.*

*( GOVINDARAJA BHATTAR) , +91 80 7252143( K.NAGESH)*

---------------------------------------------------------------------------------------------------------------------------

நன்றி: இந்த கட்டுரையில் காணப்படும் மூலச் செய்திகள் அனைத்திற்கும் ஆதாரம் திரு லஷ்மி நாராயணன் ஸ்ரீதர் அவர்களின் இணையதள செய்திகளே. http://www.karnatakavaishnavatemples.net என்ற இணையதளத்தில் உள்ளவற்றை தமிழில் பிரசுரித்துக் கொள்ள அனுமதி தந்துள்ள அவருக்கு என் நன்றி. திரு ஸ்ரீதரின் முகவரி:

**Lakshminarasimhan Sridhar, SRIHARITHA [Behind Water Tank], I Floor, Sathyam Street, I Cross, Munieshwara Swamy Layout, Munnekolala, Marthahalli Post, Bangalore: 560037, INDIA**

Tel:- Resi: 91 80 28475017, Medical Shop : 91 80 41169839, Cell: 91 9448322378

E-mail- srihi@vsnl.com